# கூட்டுறவு சங்க மூலம் பாவனைப் பொருட்கள்

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தமிழ் வெளியீடு எண் 4
போன் 389
தேசிய தினசரி
வருஷம் 18
இதழ் 266

வாரத்தொடக்கம் ஐப்பசி 19 தமிழான் 16 வெள்ளிக்கிழமை (5-11-71)

கொழும்பு, விவசாய கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் பாவனைப் பொருட்கள் இனி விநியோகிக்கப்படுமென்று அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன வர்த்தகவர் திரு. அசோகா ஜெயகிஷ்வா இன்று கூறினார். பத்திரிகையாளர் மாநாடொன்றில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

பழைய விநியோகமுறையில் தனியார்துறையில் பலவிதமான பாவனைப் பொருட்கள் இறக்குமதிசெய்யப்பட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

புனரமைப்புச் செய்யப்பட்ட கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் பாவனைப் பொருட்கள் எல்லாம் விநியோகிக்கப்படுமென்று அவர் தெரிவித்தார்.

அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனம் 10 லட்சம் ரூபாய் பொருட்கள் கூட்டுறவுச்சங்கம் மூலம் விநியோகிப்பதற்காக இறக்குமதி செய்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

பாழடைந்த மோசடிகளைத் தவிர்ப்பதற்காக அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாக அவர் சொன்னார்.

புதுச்சேரி, நவ. 4

புதுச்சேரியில் அமைக்கப்பட்டிருக்கும் பல்கலைக்கழகம் சம்பந்தமாக புதுச்சேரி மாணவர்கள் நடத்தி வந்த கிளர்ச்சி கைவிடப்பட்டுள்ளது.

மாணவர் இயக்கங்களின் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட தால்கிளர்ச்சி கைவிடப்பட்டுள்ளது

# 'தொழில் வாய்ப்புக்கு ஏற்ப கல்வித்துறை மறுசீரமைப்பு'

## அமைச்சர் பதியுதீன் விளக்கம்

கொழும்பு, வியாழன்

"தொழில் வாய்ப்புப் பெறக்கூடியவகையில் உத்தேச கல்வித்துறை மறுசீரமைப்பு அமையும்" என்று இன்று கல்வி அமைச்சர் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் கூறினார்.

கொழும்பு ரோயல்கல்லூரி மண்டபத்தில் நடந்த கல்விச் சீரமைப்பு சம்பந்தமாக கல்வி மந்திரி கலந்துரையாடிய கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

உத்தேசக் கல்வித்துறை சீரமைப்பில் நகர்ப்புறப் பாடசாலைகளுக்கும், கிராமப்புற பாடசாலைகளுக்கும் மிடையில் உள்ள வேறுபாடு கள் அகற்றப்படுமென்று கல்வி அமைச்சர் கூறினார்:

விவசாயம், கைத்தொழில் ஆகிய துறைகளில் மிகவும் கவனம் செலுத்துவதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்கலாம் என்று கல்வி அமைச்சர் மஹ்மூத் சொன்னார்.

கல்வித்துறை கல்வி, அரசியலுக்கு அப்பாற்பட்டது என்பதை அத்துறையில் பணியாற்றும்சகலரும்மனதிற் கொள்ளவேண்டுமென்று கூறினார்.

கடந்த 20 வருட காலத்தில் எந்த பாடசாலைகளில் உள்ள மாணவர்கள்தொகை இரண்டிப்பாகியிருக்கிறது. 18 லட்சத்திலிருந்து 26 லட்சத்துக்கு இப்போது அதிகரித்து விட்டது. இதேசமயத்தில் ஜி. சி. ஈ (சாதாரண) உயர்தர வகுப்புகளிலுள்ள மாணவர் தொகை 5 மடங்காக அதிகரித்துவிட்டது. 70 ஆயிரத்திலிருந்து 350 ஆயிரத்துக்கு அதிகரித்துவிட்டது என்று கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

கல்வித்துறை மறுசீரமைப்பு மூன்று, நான்கு முக்கிய அம்சங்களைக் கொண்டதாக இருக்கும். கல்வியின் உள்ளடக்கத்தை விரிவுபடுத்துவதாகவும், சமவாய்ப்பை ஏற்படுத்துவதாகவும், உயர்தரத்துக்கு ஏற்றதாகவும் இந்த சீரமைப்பின் நோக்கம் இருக்கும் என்று கல்வி அமைச்சர் கூறினார்.

.....

ஜி. சி. ஈ. பரீட்சைமுடிவு

### மூன்று மாதத்தில் தெரியும்

கொழும்பு, வியாழன்

ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சைகளுக்கு இனிமேல் பரீட்சை முடிவுற்ற மூன்று மாதங்களுக்குள் அறிவிக்கப்பட்டுவிடும்.

இதற்கான ஏற்பாடுகளை பரீட்சைப் பகுதி பதில் ஆணையாளர் போ கொக் பிரேமரத்ன எடுத்து வருகின்றார்.

.....

### வாஷிங்டனில் இந்திரா

வாஷிங்டன் நவ. 4

இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி நியூயார்க்கிலிருந்து வாஷிங்டன் வந்து சேர்ந்துள்ளார். ஜனாதிபதி நிக்சாட் நிக்ஸனுடன் பன்னாரதேஷ் பிரச்னை குறித்தும் மற்றும் சர்வதேச பிரச்னை குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துவார்.

## 5,000கிராம பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்கள்!

கொழும்பு வியாழன்

விஞ்ஞானக் கல்வியை ஊக்குவிக்குமுகமாக கிராமப்புறப் பகுதிகளிலுள்ள ஐயாயிரம் பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்கள் அனுப்பிவைக்கப் படவிருக்கின்றன.

கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்தின் உத்தரவைத் தொடர்ந்து இந்த விஞ்ஞான உபகரணங்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன.

அடுத்தாண்டு ஜனவரி முதல் இந்த உபகரணங்கள் கிடைக்கும். ஆரும் வகுப்புக்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு இந்த விஞ்ஞான உபகரணங்கள் அனுப்பப்படும். கிராமப்புறப் பாடசாலைகளுக்கும் சமசந்தர்ப்பம் அளிப்பதற்காகவே கல்வி அமைச்சர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

## 'சோஷலிச சமுதாயத்தை கட்டி எழுப்ப அரசு உறுதி'

இலங்கரத்ன

கொழும்பு, வியாழன்

நாட்டின் சமூக பொருளாதார மாற்றத்துக்கு அமைய சோஷலிச சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்குமக்களை அரசாங்கம் ஊக்குவிப்பதாக வர்த்தகஅமைச்சர் திரு. ஜி. பி. இலங்கரத்ன கூறினார்.

இன்று கொழும்பு நகர மண்டபத்தில் நடந்த சோவியத் தேசியதின விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் சொன்னார்.

சோவியத் யூனியன் இலங்கை போன்ற நாடுகளுக்கு அளித்துவரும் உதவிகளுக்கு நன்றியும் அவர் தெரிவித்தார்.

கலாசார அமைச்சர் திரு. எஸ் எஸ் குணதிலகா பேசுகையில் கலாசார துறைகளில் சோவியத் முன்மாதிரியாக விளங்குவதாகக் குறிப்பிட்டார்.

கடற்தொழிற் அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்சா, திரு. விவியன்குணவர்தன, திரு. ராஜபக்சா, திருமதி விவியன் குணவர்தன, திரு எம். ஜி மெண்டிஸ் ஆகியோரும் பேசினர்.

## உடுவில் எம். பிக்கு உதவிமந்திரி பதில்

கொழும்பு, வியாழன்

கல்விச் சீரமைப்பு பற்றி ஆட்சிமன்றப்பிரதி நிதிகள் விவாதிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்படும். ஆட்சிமன்றத்தில் விவாதிக்காமல் கல்வித்திட்டத்தைச் சீரமைப்பதில் ஆட்சிமன்றத்தைப் புறக்கணிக்கும் உத்தேசம் இல்லை.

உதவிக் கல்வி அமைச்சர் திரு பி. வை. துடாவை மேற்கண்டவிளக்கத்தை ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

புதிய கல்வித் திட்டம் பற்றி விளக்கிக்கூறுவதற்காக கொழும்பு ரோயல் கல்லூரி மண்டபத்தில் ஒரு மாநாட்டை கல்வி அமைச்சர் கூட்டியிருந்தார். இந்த மாநாட்டுக்குச் செல்வதில்லை என்று தமிழரசுக்கட்சியின் ஆட்சிமன்றக் குழு முடிவுசெய்திருந்தது மாநாட்டுக்கான அழைப்பிதழில் தமிழ் இடம்பெறாதது, கல்விச்சீரமைப்பு சம்பந்தமாக ஆட்சிமன்றத்தில் அமைச்சர் சொல்லை அறிக்கையிடத் தவறியது என்பதே காரணங்களை தமிழரசுக் கட்சியினர் தெரிவித்திருந்தனர்.

இதுபற்றி ஆட்சிமன்றத்தில் உடுவில்பிரதிநிதிநேற்று

(6-ம் பக்கம் பார்க்க)

பாடசாலை செல்லும்

## ஏழைப் பிள்ளைகளுக்கு உடுபிடவை?

கோண்டை, வியாழன்

குடும்பக்கஷ்டம் காரணமாக கிழிந்த ஆடைகளையும், அசுத்தமான ஆடைகளையும் அணிந்து கொண்டு பாடசாலைகளுக்குவரும் சிறுவர் சிறுமியர்க்கு உதவியுரியும் திட்டமொன்று சமூக சேவைகள் அமைச்சர் திரு. ஜி. பி. தென்னக்கோனால் தயாரிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இவ்வாறு உடுபிடவைகள் கிடைக்கவழியில்லாதபிள்ளைகளுக்கு சமூகசேவைஇலாகா சிறுதொகையை ஒதுக்கி கொடுத்துதவும் என்று தெரிகின்றது.

பாடசாலை அதிபர்களையும் பகுதி கிராமசேவகர்களையும் சிபார்சுகளின் மீது கஷ்டப்படும், ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் மாதந்தோறும் கிராமாதிகாரிகளின் மூலம் இந்தப் பணத்தைக் கொடுத்துதவ நிர்மாணிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. ஏழைப்பிள்ளைகளுக்கு உதவும் இந்தத்திட்டம் விரைவிலேயே மந்திரிசபையின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என்று தெரிகிறது.

## மரண அறிவித்தல்

திருமதி செல்லம்மா நவரத்தினம்

வல்ஞர்பண்ணை, ஐயனார் கோவிலடி, காலம் சென்ற முன்னாள் விதானையார் நவரத்தினம் அவர்களின் மனைவியும், மாணிக்கவாசகர், சிவசிதம்பரம், சோமசுந்தரம், திருமதி முத்துக்குமாரு திருமதி ஜெயராஜா ஆகியோரின் தாயாருமான திருமதி செல்லம்மா காலமானார்கள். அன்னாரின் பூதவுடல் இன்று 5-ந் திகதி வெள்ளிக்கிழமை மூன்று மணிக்கு ஐயனார்கோவிலடி, ஒட்டுசுழிடை, 12-ம் இலக்க இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக சோம்பயன்மனக் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 8676

இப்பொழுது யாழ். மக்களை மகிழ்விக்கத்

நிரையிடப்படுகின்றது

## யாழ். றீகல் திரையில்

தினசரி: காலை 10-00, மாலை 5-15, 7-15 மணிகளில்

AFRICAN SAFARI

[ஆபிரிக்கன் சபாரி]

(கலர் பிலிம்)

குறிப்பு: 50 பேருக்குக் குறையாத பாடசாலை மாணவர் குழுவுக்கு விசேட காட்சிக்கான ஒழுங்கு செய்து தரப்படும். தொலைபேசி: 560

தினசரி: பி. ப. 2-00, இரவு 10-00

சிவாஜி—ஜெயலலிதா—நாகேஷ்

நடித்த

கலாவதியின் கல்யாணம்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர்.-வி. என். ஜானகி பாலையா, மாதுரிதேவி நடித்த

மோகினி

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெய்சங்கர் — விஜயலலிதா நடித்த

நூற்றுக்கு நூறு

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினி - சௌகார்ஜானகி - ரவிச்சந்திரன் (இரு வேடங்களில்) நடித்த.

காவியத்தலைவி

தமிழ் நாடெங்கும் 58 வாரங்களும், ஈழத்தின் தலை நகர் கொழும்பில் 275 நாட்களும் தொடர்ச்சியாக காட்சியளித்து பெரும் சாதனை நிலைநாட்டி

இப்பொழுது யாழ். மக்களுக்கு விருந்தளிக்கின்றது

லிடோ [யாழ்நகர்]

காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30

ஆராதனை

(சகிதமான்களை கிந்திரம்)

ராஜேஷ்கன்னா ★ ஷர்மிளா தாகூர்

சுஜித்குமார் ★ ஸரீகா ஜலால்

நடித்தது.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு: 4 காட்சிகள்.

★ ரவிச்சந்திரன்

★ ஜெயலலிதா

★ நாகேஷ்

★ அசோகன்

★ ஷீலா

நடித்த

மூன்றெழுத்து

(ஸிட்மன் கலர்)


## அரி வினாக்கரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் யந்திரப்பட்டறை பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3709

மலிந்த நவதானியங்களும், கோழித்தீனி வகைகளும் மருந்துச்சரக்குவகைகளும், வெவ்வேறு பற்றரிகள் மூலம் அரைத்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- V. சிவானந்தன் மஞ்சேஸ்வரி மில்ஸ், 46/1 பிரவுன் ரோட், யாழ்ப்பாணம். 3694

### தேவை

மரவள்ளிக் கிழங்கு ஒரு தொன் ரூபா 320-00, மரவள்ளிச் சீவல் (காய்ந்தது) ஒருதொன் ரூபா 440-00. எந்த இடத்திலிருந்தும் ஏற்றுக்கொள்ளோம். தொடர்புகொள்ளவும்: த. கதிரமுமம் அன் கொம்பனி: கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. 3719

சத்தமான மணி மரர்க் வரகு அரிசி, குரக்கன் மாவிற்பனைசெய்வதற்கு ஏஜண்டுகள் தேவை P. முத்தையா, வசந்தா இன்டஸ்ரீல், நாவலடி லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் 3706

யாழ்ப்பாண நகரில் - வீடு - காணி - வயல் - தோட்டம் குறிவாங்கத்தேவை. பணம் உடனே கிடைக்கும். விலை விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3716, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 3716

நல்லூர், திருநெல்வேலி, சந்தர்மடத்தடிக்கு முன்பு பரப்பு நல்ல வீட்டுடன் அரை வெறுக்காணி தேவை. விளம்பர இல. 3711, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 3711

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

சாந்தி சினிமா (சங்கானை)

வெள்ளி சனி மாலை 4 15

CIRCUS STARS

தினசரி பி ப 6-15 9-30

ஞாயிறு 2-30, 6.15, 9-30

எம் ஜி ஆர்—சரோஜாதேவி நடித்த

கலங்கரை விளக்கம்

வெல்லி சினிமா (மானிப்பாய்)

தினசரி 6-30, 10-00

சனி, ஞாயிறு 2-30

சிவாஜி— பத்மினி

தில்லானா மோகனாம்பாள்

MANOHARA
Jaffna
Daily 4 Shows
Kirk Douglas
Henry Fonda
in
THERE WAS A CROOKED MAN
(Scope-color)

நாகம்ஸ் சினிமா

கல்லுண்டாய்

தினசரி 6-30, 9-45

'சபாஷ் மாப்பிள்ளை'

தினசரி: 4-30

SERENGETI

பலவிதமான காட்டுமிருகங்களைக் கொண்டு படமாக்கப்பட்டது.

## விற்பனைக்கு

முல்லியவளையில் 55 ஏக்கர் தென்னங்காணி விற்பனைக்கு இருக்கிறது. சில தென்னைகளும் வாழைகளும் காய்க்கின்றன. கிணறும், காவல் கொட்டில்களும் உண்டு. சுப்பிரமணியம், செல்வநாதன், ஹக்கிறதோயா. 3710

ராதா குருபற்பொடி பற்களை வெண்மையாக்கி வாய் நாற்றத்தைப் போக்கி பற்களுக்குப் பூரணமான பாதுகாப்பு அளிக்கும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 3708

M. G. M. குரக்கன்மா, கடலைமா, அப்பளமா, உழுந்து மா. சோப்பிற்தூள், மஞ்சள்தூள் ஆகியவை எம் விடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிப்பு:- விவசாரிகளுக்கு விசேஷ சலுகை உண்டு. மு. மதி கிறைண்டிங் மில்ஸ், 443, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 3675

## குழந்தைகளுக்கு வயிற்றோட்டம்

வருத்தித்துறை, விவாபுத்தூர் சிறுப்பிட்டி ஆகிய பகுதிகளிலுள்ள குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் வாந்தி ஆகிய நோய்கள் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து காரநார நடுப்புப் பகுதியினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். தொடர்ந்து சிலநாட்களாகப் பெய்துவரும் மழையே இந்த நோய்க்குக் காரணமென்று கருதப்படுகிறது.

## முதலாவது கூட்டம்

யாழ்ப்பாணம் வெளிநாட்டு இலக்கிய கலாச்சாரப் பேரவையின் தமிழ் இலக்கிய ஆலோசனைக் குழு யாழ்ப்பாணத்திற் ஜனவரிமாதம் இலக்கிய விழாவொன்றை நடத்தவிருக்கிறது. இந்த விழாவிற்கான பிரதேச அமைப்புக்குழு ஒன்று நிறுவப்பட இருக்கின்றது. இதுசம்பந்தமான முதலாவது கூட்டம் நாளை காலை யாழ் நூலக மேல்மாடியில் நடைபெற விருக்கிறது.

## கல்வி

ஜி. சி. ஈ. வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, குடியியல் முதலிய பாடங்களுக்கு வீடுதோறும் சென்று இலைப்பாறிய பல்கலைக்கழக ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். (English Rapid Revision Course) தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 3721 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 3721

## பன்றிகளின் தொல்லை

சமீபகாலமாக, விவசாயிகளிடையே இவ்வூர் விவசாயக் குடியேற்றத் திட்டத்தில் பன்றிகளின் தொல்லை அதிகரித்துள்ளதாம். பன்றிகளால் பயிர் நாசமடைவதைத் தொடர்ந்து இவை விவசாயிகள் வெறுப்பைத் தூண்டுவர்.


உங்கள்

5-ம் வகுப்பு மாணவர்

பரீட்சையில் நல்ல தேர்ச்சியெற வேண்டாமா?

பாடத் திட்டம் முழுவதையும் அடக்கி

திருமதி பத்மா சோமகாந்தன் தொகுத்துள்ள மாதிரிவினாப்பத்திரங்கள் மாணவர்களுக்கு மிகச் சிறந்த பயிற்சி அளிக்கின்றன

தமிழ் ... சதம் 70
கணிதம் ... சதம் 70
குழந்தை ... சதம் 70
ஆங்கிலம்... சதம் 70
சைவசமயம் சதம் 70

தொலைவான வாசகர்களுக்கு வேறுக்குத்தரத்த ஏற்பு உண்டு.

ஆனந்தா அச்சகம்

226 காங்கேசன்துறைவீதி யாழ்ப்பாணம்.


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### சந்தைக் குத்தகை ஏல விற்பனை

1. பெரிய கடை மீன்சந்தை.
2. நாவாந்துறை (பழைய) சந்தை.

8-11-1971 தொடக்கம் 31-12-1971 வரையுள்ள காலத்திற்கு, பெரியகடை மீன் சந்தையும், நாவாந்துறை (பழைய) சந்தையும் குத்தகைக்குக் கொடுக்கப்பட இருப்பதால், இக்குத்தகை உரிமை 6-11-71 சனிக்கிழமை கீழ்வரும் விபரப்படி அச்சந்தைகளில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பெரியகடை மீன்சந்தை 6-11-71 சனிக்கிழமை காலை 10.00.

நாவாந்துறை (பழைய) சந்தை 6-11-71 சனிக்கிழமை காலை 11-30.

கூடிய கேள்விக்காரர் ஏல விற்பனையில் கேட்கும் தொகையை ஏல விற்பனைசெய்யும் உத்தியோகத்தரிடம் உடன் செலுத்தல் வேண்டும்.

சபையின் விதிகளுக்கமைய சிறந்தெற்ற கேள்விக்காரர் இதற்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல்வேண்டும். இது சம்பந்தமான இதர தகவல்களை இச்சபையின் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகர ஆணையாளர்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
3-11-1971. 3118

மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர்

திரு. தெ. து. ஜயரத்தினம் B. A; J. P. அவர்களின்

சேவைநலம் பாராட்டு விழா

7-11-71 ஞாயிறு பிற்பகல் 4-30 மணிக்கு கல்லூரியில் நிகழும்.

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மா மகாதேவன்
அதிபர்.

மகாஜனக்கல்லூரி,
தெல்லிப்பழை. 3115

## இந்திரா விஜயத்தின் பிரதிபலன்!

# பிரிட்டிஷ் தலைவர்கள் இந்தியாவுக்கு ஆதரவு?

## யாஹ்யாவுக்கு ஆஸ். பிரதமர் அறிவுரை

வாஷிங்டன், நவ. 4

ஷேக் முஜிபுர் ரஹ்மான் தலைமையில் கிழக்குப்பாகிஸ்தானில் ஜனநாயக அரசு ஒன்று விரைவிலேயே நிறுவப்படவேண்டும் என்று ஆஸ்திரேலியப் பிரதம மந்திரி திரு. மக்மோஹன் வலியுறுத்தியுள்ளார்

இதேபோன்று பிரஞ்சு வெளிநாட்டு அமைச்சரும் ஒரு வேண்டுகோளை பாகிஸ்தான் அரசுக்கு விடுத்திருக்கிறார்

ஆஸ்திரேலிய பிரதம மந்திரி இப்பொழுது அமெரிக்காவில் இருக்கிறார் வாஷிங்டனில் ஒரு விருந்து வைபவத்தில் பேசுகையிலேயே கிழக்குப் பாகிஸ்தானில் விரைவில் ஜனநாயக அரசுக்கு வழிகோலக்கூடிய தேர்தல் நடத்தப்படவேண்டுமென்கிற கருத்தை வெளியிட்டார். இப்படிச்செய்வது எல்லாருக்கும் நன்மையாய் இருக்கும் என்று திரு. மக்மோஹன் கூறினார்

இப்பொழுது அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைத் தாம் சந்திக்கப்போவதாகவும், கிழக்கு வங்கப் பிரச்னையைப் பற்றி அவருடன் பேசப்போவதாகவும் ஆஸ்திரேலிய பிரதம மந்திரி கூறினார்

பிரஞ்சு ஆட்சியின்றத்தில் நேற்று கிழக்கு வங்காளப் பிரச்னை பற்றிப் பேசிய பிரஞ்சு வெளியுறவு அமைச்சர் திரு. ஷிமான் கிழக்கு வங்காளப் பிரச்னைக்குவிரைவில் ஒரு தீர்வு ஏற்படுத்தப்படவேண்டும் என பாகிஸ்தான் அரசிடம் திரும்பவும் தாம் கேட்டுக்கொண்டிருப்பதாகக் கூறினார். இந்தியாவுக்கெதிராக சண்டை ஒன்று ஏற்படுமெனத் தாம் கருதவில்லையென்று கூறிய திரு. ஷிமான் கிழக்கு வங்காளத்தை இந்தியா தன்வசம் எடுத்துக்கொள்ளப் பார்க்கின்றது என்று கூறப்படுவதையும் அபத்தம் என்றார்

இம்மாதம் 21-ம் தேதி வாக்கில் தாம் இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருப்பதாகவும் அப்பொழுது அங்கு இப்பிரச்னை பற்றி ஆராயப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்குள் வந்தவண்ண வங்கதேச அகதிகளுக்காக உலக நாடுகள் பெருமளவில் உதவிபுரிய முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்

### அமெரிக்காவில் திருமதி காந்தி

பாரதப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி லண்டனிலிருந்து வாஷிங்டன் செல்லும் வழியில் நியூயோர்க் வந்துசேர்ந்தார். திருமதி காந்தி இன்று மாலை அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸனை சந்தித்துப் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திருமதி காந்தியுடனோர்க் வந்தார் ரொல்பெக்லடுடன் சுமார் 90 நிமிடங்கள் ஆலோசனை நடத்தினார்

### லண்டன் விஜயத்தில் திருப்தி

திருமதி இந்திரா காந்தியின் லண்டன் பயணம் மிகவும் திருப்திகரமாக அமைந்திருந்ததாக நிருபர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவின் நிலைமையை பிரிட்டிஷ் தலைவர்கள் இப்பொழுது நன்றாகப் புரிந்து கொண்டுவிட்டார்கள் என்றும் இந்திய நிலைக்கு அவர்கள் அனுதாபம் தெரிவிப்பதாகவும் தெரிகின்றது

### இந்தியாவை ஆதரிக்கவேண்டும்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் ஏற்பட்டுள்ள தகராறில் இந்தியாவின் நிலையைப் பிரிட்டன் ஆதரிக்கவேண்டும் என்று 'லண்டேட்டர்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகை வலியுறுத்தியிருக்கின்றது.

பாகிஸ்தானை ஆதரிக்கும் போக்கை நிறுத்திகொண்டு இந்தியாவை ஆதரிக்க பிரிட்டன் முன்வரவேண்டும் திருமதி காந்திபிரிட்டனுக்கு விஜயம் செய்ததினால் பயன் ஏதும் இல்லை என அப்பத்திரிகை கருத்து வெளியிட்டிருக்கின்றது

இதே கருத்தை 'ஈவினிங் நியூஸ்' என்ற மற்றொரு பத்திரிகையும் வெளியிட்டிருக்கின்றது

### அகதிகளுக்கு அமெரிக்க உதவியில்லை

அமெரிக்க அரசின் வெளிநாட்டு உதவித்திட்டத்தை அமெரிக்க செனட்சபை நிராகரித்துவிட்டதால் இந்தியாவிலுள்ள கிழக்குப்பாகிஸ்தான் அகதிகளுக்கு நிதி உதவி கிடையாது என அமெரிக்க அரசு அறிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

### யுதாண்ட் சந்திப்பு இல்லை

இப்பொழுது அமெரிக்காவிலிருக்கும் இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்டை சந்திக்கமாட்டார் என்று தெரிகின்றது. யுதாண்ட் இப்பொழுது கலியாண காரணமாக ஆஸ்பத்திரியில் இருப்பதே இதற்குக் காரணம்.

யுதாண்ட் இரத்தக்கசிவு அல்சர் நோய்க்கு ஆளாகியிருப்பதாகத் தெரிகிறது. ஏழு ஆண்டுகளுக்கு முன்னரும் யுதாண்ட் இதே நோய்க்கு ஆளாகியிருந்தார் என்று தெரிகின்றது.

கிழக்குவங்காளப் பிரச்னைக்கு யுதாண்ட் வைத்திருக்கும் சமரசயோசனையை திருமதி காந்தியிடம் விளக்குவார் என்று முன்பு எதிர்பார்க்கப்பட்டது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் விஜயம் செய்யும்படி பாகிஸ்தான் அதிபர் திரு. யாஹ்யாகான் விடுத்த கோரிக்கையைற்றிய தமது முடிவையும் திருமதி காந்திக்கு அவர் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் திடீர் கலியாண முற்றதால் திருமதி காந்தி அவரை ஆஸ்பத்திரியில் போய்ப்பார்த்தாலும் ஆலோசனை எதுவும் நடத்தக்கூடிய வாய்ப்பு இல்லை. திருமதி காந்தி பிரான்சுக்கு சென்று திரும்பும் வழியில் யுதாண்டைச் சந்திப்பாரா என்பதும் தெரியவில்லை.

### பரவலாக சண்டை

கிழக்குவங்காளத்தில் விடுதலைப் படையினருக்கும் மேற்குப்பாகிஸ்தான் ராணுவத்துக்குமிடையில் பரவலாக சண்டை நடைபெற்று வருவதாகத் தகவல் வந்து கொண்டிருக்கின்றது. சிலட் அருகில் நேற்று நடைபெற்ற ஒரு மோதலில் 17 சிப்பாய்கள் கொல்லப்பட்டார்கள் என்றும் 30 பேர் வரை காயமடைந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது இப்பகுதியில் சுமார் 200 சதுரமைல் பரப்புவிடுதலைப் படையினரிடம் இருக்கின்றதாம். மைமன்சிங் அருகில் ராணுவப்படை ஒன்று முற்றுகைப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்திய எல்லைப்புற நகரமான திரிபுராவில் பாகிஸ்தான் எல்லைப்படையினர் தொடர்ந்து குண்டு வீசித் தாக்கிவருவதாக இந்திய செய்திகள் கூறுகின்றன கடந்த 2 தினங்களில் 6 தடவைகள் இவ்வாறு பாகிஸ்தானியர் தாக்குதல் நடத்தினார்களாம். பாகிஸ்தானியர்கள் இந்தத் தாக்குதல்களை நிறுத்துவதற்காக இந்திய படையினர் திருப்பிச்சுட வேண்டி நேரிட்டதாகவும் ஆனால் எல்லைக் கோட்டை மீறி இந்தியர் மறுபக்கத்துக்கு நுழைய விரும்பவில்லையென்றும் அவர்கள் கூறினார்கள்.

### உலக உணவு ஸ்தாபனத்தில் சீனா

ரோம், நவ. 4

ஐக்கியநாடுகளுடைய உணவு ஸ்தாபனத்தில் சீன மக்கள் குடியரசையும் சேர்த்துக் கொள்ள தெனமுடிவுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஸ்தாபனத்தின் தலைமை அலுவலகம் ரோமில் இருக்கிறது. இந்த ஸ்தாபனத்தில் 34 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

## ஒரு கோடி ரூபாய் நஷ்டம்

சோஃபியா, வியா

இவ்வருடம் ஏப்ரல் மாதம் தொடக்கம் ஆகஸ்டு மாதம் வரையில் இலங்கை ரயில்வேக்கு ஒரு கோடி 4 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம் ரயில்வே பகுதி உயர்தர அதிகாரி ஒருவர் இந்தவகை வெளியிட்டுள்ளார்.

ரயில்வே பிரயாணக் கட்டணம் உயர்த்தப்பட்டபோதிலும் நிலைமை அவ்வளவு திருப்திகரமாகவில்லையென்று இந்த அதிகாரி கூறியுள்ளார்.

## அணுசோதனைக்கு கனடாவில் எதிர்ப்பு

ஒட்டாவா, நவ. 4

அலாஸ்கா தீவுகளில் அமெரிக்கா பூமிக்கடியில் நடத்திவிருக்கும் அணுகுண்டுச் சோதனை குறித்துக் கனடாவில் பலத்த ஆட்சேபம் கிளம்பியிருக்கின்றது

இந்த அணுகுண்டுச் சோதனையினால் கனடாவும் அதனை அடுத்துள்ள நாடுகளும் பெருமளவில் கதிரியக்கத்தினாலும் வேறு பல வழிகளிலும் பாதிக்கப்படக்கூடுமென்று அஞ்சப்படுகிறது

அலாஸ்கா தீவில் பூமிக்கடியில் சுமார் ஒரு லைமல் தூரத்தில் புதைக்கப்பட்டுள்ள இந்தக்குண்டு வெடிப்பு அமெரிக்கா இதுவரை பூமிக்கடியில் சோதித்துள்ள மிகப் பெரிய சோதனையாகுமெனக் கூறப்படுகிறது.

இந்தக் குண்டுவெடிப்பின் காரணமாகப் பூமி அதிர்ச்சிகளும், கடல் எழுச்சிகளும் ஏற்படக்கூடுமென்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

சோவியத் யோசனை

## உலக ஆயுதக் குறைப்பு மாநாடு

நியூயோர்க், நவ. 4

உலக ஆயுதக்குறைப்பு மாநாடொன்று நடத்தப்படவேண்டும் என்ற சோவியத் யூனியனின் யோசனை மீதான விவாதம் ஐ. நா. சபையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. வில் சீனாவின் நிரந்தரப் பிரதிநிதி யாவலம் தலைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். சீன வெளியுறவு உதவி அமைச்சர் கியாஒ குவான் ஹுவா சீனக் குழுவின் தலைவர் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

### தென் ஆபிரிக்காவை கண்டிக்கும் தீர்மானம்

இனவேறு பாட்டை எதிர்

(4-ம் பக்கம் பார்க்க)

### பிரிட்டிஷ் இராணுவத்தினரின் 13,000 மைல் பயணம்

லண்டன், நவ. 4

இம்மாதம் பிரிட்டிஷ் இராணுவத்தினர் இரண்டு 'நேஞ் ரோவர்' வாகனங்களில் அமெரிக்கக் கண்டத்தின் ஒரு பகுதியிலிருந்து மறு முனைக்குப் பிரயாணஞ் செய்ய முயல்வார்கள்.

வடஅமெரிக்காவில் அலஸ்காவில் இருந்து தென் அமெரிக்காவின் தெற்கு முனையான கிலிக்கு மேற்கொள்ளப்படவிருக்கும் இந்த நீண்ட பயணத்தின் தூரம் 13,000 மைல்களாகும்.

இப்பயணம் வெற்றிகரமாக முடியும்பட்சத்தில் வட துருவத்தில் இருந்து தென் சிலிக்குத் தொடர்ச்சியான ஒரு வீதி அமைக்க எடுக்கப்படும் முயற்சியாக வெற்றியாக அமையுமெனவும் இம்மாதம் 21ந் தேதி ஆரம்பமாகும் இப்பிரயாணம் ஐந்து மாதங்களில் முடியுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கொள்ளப் போவதாக கனடாவில் சோவியத் தூதராகவிருக்கும் திரு. ஹுவாங் ஹுவா தெரிவித்துள்ளார். இவர் ஐ. நா. வில் சீனாவின் நிரந்தரப் பிரதிநிதி யாவலம் தலைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். சீன வெளியுறவு உதவி அமைச்சர் கியாஒ குவான் ஹுவா சீனக் குழுவின் தலைவர் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

### ஆசிரியர் தெரிவில் மாணவருக்கும் உரிமை வேண்டும்

பம்பாய் நவ. 5

ஆசிரியர்களைச் சேவையில் அமர்த்துவதற்கு முன்னர் அவர்களை மதிப்பிடுவதற்கு மாணவர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும்.

பம்பாய் நகரில் உள்ள மாணவர் தலைவர்கள் பம்பாய் பல்கலைக்கழக உப வேந்தரிடம் மேற்கண்டவாறு கோரியுள்ளனர். நாட்டின் பல்வேறு பகுதியிலும் உள்ள பல்கலைக்கழகங்களின் மாணவர் நிறுவனங்களின் செயலாளர்களின் பம்பாயில் நடைபெற்ற இரு நாள் மாநாட்டில் ஆசிரியர்களைச் சேவைக்கு அமர்த்த முன்னர் மாணவர்களுடனும் இவ்விடயம் சம்பந்தமாக கலந்தாலோசிக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது.

உப வேந்தரின் முன்னர் இந்தக் கோரிக்கையைச் சமர்ப்பித்த மாணவர் தலைவர்கள் தங்கள் கோரிக்கையை நம்பகரமாக முடிவிற்குச் செல்லப் படுத்துமாறும் அவ்வாறு செய்வதில் கஷ்டம் ஏற்படின் அதைத் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டனர்.

டிசம்பர் 15 ம் திகதி

# தமிழகத்திரைகளில் குத்துவிளக்கு

மாவிட்டபுரம், விமா இலங்கையில் தயாரான இனிமாப்படம் ஒன்று முதன் முறையாக இந்தியாவில் திரையிடப்படவிருக்கிறது. அடுத்த மாதம் 15-ம் திகதி தமிழகத்தில் இந்த திரைப் படம் திரையிடப்படும்.

வி. எஸ். ரி. பிலிம்ஸ்சாரின் குத்துவிளக்கு என்ற திரைப்படமே தமிழகத் தியேட்டர்களில் திரையிடப் படவிருக்கும் படமாகும். சமூகத்தில் தயாரிக்கப்பட்டு தமிழகத்தில் திரையிடப் படும் முதல்படம் என்ற பெருமையை இது பெற விருக்கிறது.

இப் படத்தில் நடித்த நடிகை லீலா நாராயணன், ஆனந்தன், ஜெயகாந்த் மற்றும் நடிகர்குழுவும் தமிழகம் சென்று இவ் விழாவில் கலந்து கொள்ளும்.

எம்.ஜி.ஆர், விஜயகுமாரன் உட்பட மற்றும் நடிகர்களும் நடிகைகளும் இவ் விழாவில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஜனவரி மாதமளவில் இப்படம் இலங்கையில் திரையிடப்படுமென நம்பப்படுகிறது.

## பொய்முறைப்பாடு செய்தாராம்

### பெண்மீது வழக்குத் தாக்கலாகும்

மாவிட்டபுரம், திங்கள் சமிக்கிழமை அதாவதாக பொய் முறைப்பாடு கொடுத்த தாக ஒரு பெண்ணுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் காங்கேசன்துறைப் பொலிசார் வழக்குத் தொடர விருக்கின்றனர்.

வதியிடியைச் சேர்ந்த மாணிக்கம் பெண் நாகம்மா, தம்மிடமிருந்த குழந்தை என்னும் பெண் 9 மாதத்துக்கு முன் 300 ரூபா பணம் வாங்கிய தாகவும் தாம் பணம் வாங்கச் சென்ற சமயம் பணம்தரமுடியாது வற்றுகறி சுவர் தன்னைத் தள்ளி விழுத்த அவரது மகனான சின்னராசா தனது சமூகத்தில் இருந்த சமிக்கிலியை அதாவதாகவும் காங்கேசன்துறைப் பொலிஸில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் குழந்தையையும், அவரது மனைவியும் கைதுசெய்து மல்லாகம் நீதிபதி முன் ஆஜர் செய்து றிமாண்டில் வைத்திருந்தனர்.

இதுகுறித்து விசாரணை செய்த குற்றத்தடுப்பு இன்ஸ்பெக்டர் திரு வி. செல்லையா பிரஸ்தாபப்பெண்ணின் சமிக்கிலி அறுக்கப்பட்டிருக்கவென்றும், அவர் அச் சமிக்கிலியை அடைவுவைத்துள்ளாரென்பதையும் கண்டுபிடித்தனர். இதனையடுத்து நாகம்மாமீது பொய் முறைப்பாடு செய்தாராக வழக்குத் தொடரப்பட விருக்கிறது.

## திருப்பணி நிதி

யாழ்ப்பாணம், வெள்ளி திருக்கேதீஸ்வர புனருத்தாரண திருப்பணி நிதிச் சபையின் கொடிகாமம்கிளை இதுவரை 1000 ரூபா நிதி திரட்டியுள்ளது. எடுத்த வாரம் யாழ் மாவட்ட திருக்கேதீஸ்வர புனருத்தாரண திருப்பணி சபையிடம் இந்த நிதி ஒப்படைக்கப்பட விருக்கிறது.

## தமிழரே தூதராக வேண்டுமாம்

கொழும்பு, வியாழன் இலங்கையின் தென் இந்தியத் தமிழரே அடுத்த இலங்கையின் இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட வேண்டும் என இலங்கை திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் திரு ஏ. எஸ். மணவைத்தம்பி கோரிக்கை விடுத்துள்ளார்.

திரு. மணவைத்தம்பி இது பற்றி மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழியினருக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதில் இந்திய தூதரகம் அக்கறை காட்டுவதில்லை, தென்னிந்தியத் தமிழரை இலங்கையின் இந்தியத் தூதுவராக நியமிப்பதினால் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழியினருக்கு நன்மையுண்டாகும் என்றார்.

சி.பி.ஏ

## சைவசமய பாடப் பரீட்சை

கேதீஸ்வரம், வியாழன் கொழும்பு விவேகானந்த சபையின் சைவசமய பரீட்சையில் மன்னார்ப் பகுதிப் பாடசாலைகளிலிருந்து நூற்றுக்கணக்கான மாணவர்கள் தோற்றியுள்ளனர். ஆறாம், ஐந்தாம் வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவிகளின் தொகையே பரீட்சை எடுத்தவர்களில் கூடுதலாக இருந்ததென ஆசிரிய வட்டாரங்கள் தெரிவித்தன.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளிக்கிழமை

(5-11-71)

(செய்திகள்: காலை 6-30, மதம் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 59 மீ காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 விடுதலையிருந்து, 7-15 பண்ணிசைத்தமிழ், 7-45 குரல் வளை, 8-00 இசையமுதம் நிகழ்ச்சி

இரவு, 6-15 வயலினிசை, 6-30 பஜனை, 7-00 பெண்ணுலகம், 7-35 மெல்லிசைப் பாடல்கள், 7-40 உலகச் செய்திகள், 8-00 முன்னிலை நிகழ்ச்சி, 9-30 வேசை, 9-40 பாட்டு, 10-30 செய்திக் தொகுப்பு.

## இந்தத் திராவகம் மண்ணெண்ணையா?

கண்டி, வியாழன் கண்டியிலிருந்து சுமார் 6 மைல் தொலைவில் அக்குரான என்ற இடத்தில் நிலத்திலிருந்து மண்ணெண்ணெய் போன்ற ஒரு திராவகம் கசிந்து வெளியேறுகிறது.

மக்கள் இதனைப் பொலிசுக்கு அறிவித்தனர். ஒரு நாளில் மட்டும் வெளியேறிய மண்ணெண்ணெய் போன்ற இத்திராவகத்தில் 25 கலன் சேர்க்கப்பட்டது. இவ்வட்டாரத்திலிருந்து வெளிப்பட்ட இத்திராவகம் பற்றி மேலும் ஆராய்ச்சி செய்ய தற்காக கொழும்புக்கு 'சாம்பிள்' அனுப்பப்பட்டுள்ளது.

## மன்னாரில் வரவேற்பு

மேசாலை, வியாழன் இம்மாதம் 8-ந் திகதி மன்னாருக்கு வருகைதரும் கொழும்பு பிஷப் திருச்சபைப் பேராயர் மாண்புமிகு திரு. அமேதா மக்களவுக்கு மன்னார் கொழும்பு பிஷப் சபையினரால் ஒரு வரவேற்பளிக்கப்பட விருக்கிறது.

## கதிர்காமம் கி. ச. கலைக்கப்பட்டது

கதிர்காமம், வியாழன் கதிர்காமம் கிராமசபை கலைக்கப்பட்டு அதன் நிர்வாகம் தற்போது உள்ளூராட்சி உதவிக் கமிஷனரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சீரற்ற நிதிநிலையும் வரிகளை அறவிடாதவிருப்பதுமே இதற்குக் காரணம் எனத் தெரியவருகிறது.

வல்வெட்டித்துறை

## நாவலர்மடத்தில் சமயவகுப்பு

வல்வெட்டித்துறை, வியாழன் முதியோருக்குச் சமய வகுப்பு நடத்தும் சமயத் தொண்டொன்றை வல்வெட்டித்துறை ஆய்வுக்குழுவின் ஆதரவில் குத்திவடிப் பிள்ளையார் நாவலர் குடும்பமடத்தில் ஆரம்பித்து நடைபெற்றுவருகிறது.

இச்சமயவகுப்பில் மெய்கண்டசாஸ்திரம் சிவஞான சித்தியார் தினமும்மாலைகற்பிக்கப்படுகிறது. சென்ற மாதம் கந்தசஷ்டியை ஒட்டி முன்னாள் தலைமைஆசிரியர் திரு. க. கப்பிரமணியத்தின் ஆதரவில் சூரபன்மன் வதைப்படலம் வாசிக்கப்பட்டது. ஆய்வுக்குழுவினர் எதிர்வரும் தைப்பொங்கலை யொட்டிச் சிறுவர்களுக்கும் மாதர்களுக்கும் சமய வகுப்புக்கள் நடத்த விரும்பதாகவும் மாலை நேரங்களில் சிறுபிள்ளைகளுக்குக் கல்வி கற்றுத் தருவதற்குக் கல்வி, கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், சொற்பொழிவுகள் நடத்துவதற்கும் ஒழுங்குகள் செய்யப்படுகிறது.

வல்வெட்டித்துறையிலிருந்து திச்சமயலையச் சேர்ந்த திரு. எம். நடராசா இவற்றுக்கான நடவடிக்கைகளைக் கவனித்து வருகிறார்.

## பாணந்துறையில் யுவதிகள் மகாநாடு

பாணந்துறை, வியாழன் அகில இலங்கை யுவதிகள் மகாநாடு பாணந்துறை வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. இம்மகாநாட்டுக்கு நாடெங்கும் பல்வேறு மாகாணங்களிலுமிருந்தும் இளம் பெண்கள் கலந்து கொண்டனர்.

கொழும்பு தேசிய இளம் பெண்கள் கிறிஸ்தவ சங்கம் ஒழுங்குசெய்த இம்மகாநாடு ஒரு நாள் முழுவதும் நடைபெற்றது.

சாதி மத பேதமின்றி நாட்டின் தேசிய வர்ச்சிக்கு இளம் பெண்களின் பங்கு என்னவென்பதைத் தெரிவிப்பதற்காகவே இம்மகாநாடு கூடிடப்பட்டது.

## உலக—

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் அரசியல் மதத்தலைவர்களை சிறையிலடைத்து கொடுமைப் படுத்துவதாக தென்னாபிரிக்க அரசாங்கத்தைக் கண்டிக்கும் தீர்மானம் ஐ. நாவின் பொதுசபை அரசியல் குழு கூட்டத்தில் பெரும் ஆதரவுடன் நிறைவேறியது. இத்தீர்மானம் இனி மகாசபையின் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 19ந் திகதி
(5-11-71)
வியாழக்கிழமை

மேஷம்: திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இன்று உற்சாகமான தினம். செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவும் தப்பாமல் கிடைக்கும்.

ரிஷபம்: தாவிய நஷ்டத்திற்கும் இடமுண்டு. அடக்கமும் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் தன்மையும் வேண்டும்.

மிதுனம்: வாதரோகத்திற்கு இடமளியாது சுகாதாரமாக நடந்து கொள்ளவும் இன்று சுகாரானதினம்.

கடகம்: பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள் இதன் மூலம் நல்ல செலவாகும். அரசியல்வாதிகளுக்கு இன்று அதிஷ்டதினம்.

சிம்மம்: குறுக்கே தோன்றும் கடமையில் தடை தோன்றும். நஷ்டத்திற்கு இடமுண்டு. தாயட்சம் நன்று.

கன்னி: எண்ணம் போல் வாழ்வு மலரும் சமூகத்தில் மதிப்பு உயரும் வாகனச் சொத்துக்காரர்களுக்கு முன்னேற்றமுண்டு.

துலாம்: இதயத்தில் இனிமையான எண்ணங்கள் தவழும். கடந்தகாலச் சம்பவம் ஒன்று எதிர்கால முன்னேற்றத்திற்கு வழி அமையக்கூடும்.

விருச்சிகம்: வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம் உடல் நலத்தைப் பேணவும், பகைமுக்கிடம் தோன்றும். மதிப்பும் உடன்சேரும்.

தனுசு: ஆரம்பத்தில் முக்கிய கட்டம் போக்கிடவர்கள் இன்று ஆதரவு கொடுப்பார்கள். காதல் ஜோடிகளுக்கு பொன்னாளதினம்.

மகரம்: நன்கையே தனக்குதவி என்று செயலாற்றவும் மறைமுக எதிரிகள் விஷமத்தனங்களில் ஈடுபடுவார்கள். நிதானம் வெற்றிவைத்தரும்.

கும்பம்: சிலர் வாழ்க்கையில் பொதுசனத் தலைமைக்கும் இடம்முண்டு பெரியவர் ஒருவர் உங்களுக்கு கைகொடுத்து உதவுவார்.

மீனம்: காசுநடைவிலும் நஷ்டம் ஏற்படும். பூமிபிணக்குகளின் மூலம் வழக்கு விவகாரங்களிலும் மாட்டிக் கொள்ள நேரிடலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலும்பிள்ளை

## இடமாற்றம்

கழிபுரம், வியாபகண்டத்தப்புக் கிராமவைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய திரு. எஸ். தாமோதரக்பிள்ளை இம்மாதம் முதல் காங்கேசன்துறை மத்திய மருந்தகத்துக்கு இடமாற்றம் செய்யப்படுகிறார்.

விஷத்தை உறிஞ்சிய

## வைத்தியர் மயக்கம்

சங்கானை, வியாழன் விஷப்பாம்பினால் கடியுண்டவரின் காயத்தை தன் வாயினால் உறிஞ்சிய வைத்தியர் மயக்கமடைந்தார்.

அயிலாண்டம் என்னும் பெண் நச்சுப் பாம்பினால் தீண்டப்பட்டு அபாயகரமான நிலையில் விஷக்கடி வைத்தியசிடம் சேர்க்கப்பட்டார். இவ் வைத்தியர் காயத்தை வாயினால் உறிஞ்சி விஷத்தை எடுக்கமுற்பட்டபோது மயக்கமடைந்தார் எனத் தெரிகிறது. பின்பு பிறிதொரு விஷக்கடி வைத்தியர் வரவழைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது.


மணப் பெண்களுக்குத் தனித்துவமாக வழங்கும்

விசேட வெதுமதி சலுகை நீடிக்கப்பட்டுள்ளது

திருமணத்தை எதிர்நோக்கி நிற்கும் எந்த ஒரு மணமகளும், திருமணம் பதிவுக்காரரின் வீடிதம், தனது திருமண அறிவித்தல் அல்லது திருமண நிச்சயார்த்தத்தை நிரூபிக்க ஏற்றுக் கொள்ளத்தக்க ஏதாவதொரு தஸ்தாவேஜு, இவற்றில் ஏதாவதொன்றைக் காண்பித்து, அத்துடன் 1971 நவம்பர் 30-ந் திகதி நடைபெறும் 32-வது மஹாஜன சம்பத சீட்டிழுப்பு டிக்கெட்டுகளில் இருபத்தைந்து (25) அல்லது 1971 நவம்பர் மாதத்தில் நடைபெறும் ஏதாவது ஒரு தேசிய லொத்தர் சீட்டிழுப்பு டிக்கெட்டுகளில் ஐம்பதை (50) சேர்த்து அந்தந்தச் சீட்டிழுப்பு திகதிகளுக்கு முன் கையளித்து, கொழும்பு-3, காலிவீதி 502/1ம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபைக்கு ரூபா 950/- அல்லது ரூபா 700/- அல்லது ரூபா 200/- அல்லது ரூபா 175/- செலுத்தி ஒரு இந்தியன் கூறை சில்க் சாறியை விசேட பரிசாகப் பெற்றுக் கொள்ளலாம். இவ்விசேட பரிசுகள் வேலைநேரங்களில் "முதல் வருபவருக்கு முதல் தருவது" என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

இந்த டிக்கெட்டுகள் வாவும், கறைச்சேலை வழங்கப்பட்டதும், அவற்றிற்கு இடப்பட வேண்டிய குறியீடுகளுடன் உரியவருக்குத் திருப்பித் தரப்படும்.

தேசிய லொத்தர் சபை

ஆட்சி மன்றத்திலே .....

# "பொருத்தமான இடங்களில் இனிகைத்தொழில் நிலையங்கள்"

ஆட்சிமன்றம் நேற்று முன்தினம் கூடியபொழுது கைத்தொழில் விஞ்ஞான வினைஞர் அமைச்சர் திரு. வி. யி. கமலிகா நீண்ட காலமாகப் பலரும் கட்டிக் காத்து வந்த ஒரு குறையை ஓர் உண்மையை வெளியிட்டார். அதாவது கடந்த காலங்களில் கைத்தொழில் நிலையங்கள் நிறுவுவதற்கு அரசினால் காரணங்களை ஆடிப்படை யாக்கொண்டே இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன என்பதை அமைச்சரே கூறினார். தமது அமைச்சின் கீழுள்ள கூடுதுறைகளுக்கு பலவற்றின் அறிக்கைகளை அமைச்சர் சபையில் சமர்ப்பித்தார். அப்போது அவர் பேசுகையில் கைத்தொழில் நிலையங்களை நிறுவுவதற்கு இடங்கள் தெரிவு செய்யப்படுகையில் அரசியல் நோக்கங்களே அடிப்படையாக இருந்தன என்று குறிப்பிட்ட அவர் இதற்கு உதாரணமாக கொஸ்கொட மரத் தொழிற்சாலையையும் காலி சிமெந்துத் தொழிற்சாலையையும் எடுத்துக்காட்டினார். இனிமேல் பொருத்தமான தகுதியான இடங்களிலேயே புதிய கைத்தொழில் நிறுவனங்கள் நிறுவுவதற்குத் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் அமைச்சர் உறுதியளித்தார். அந்தத்தொழிற்சாலையை இங்கே அமையுங்கள். இந்தத் தொழிற்சாலையை அங்கே அமையுங்கள் என்று ஆட்சிமன்ற உறுப்பினர்கள் தமக்கு தொல்லை கொடுக்காவிட்டால் தமது முயற்சி சுலபமாக நிறைவேறுமென்பதையும் அமைச்சர் சுபசிகா சபையில் சுட்டிக்காட்டினார்.

இதற்கு முன்பாக ஒரேயடிக்கொழும்பு மாநகரசபையும் கடுவர்கல்லி மாவட்ட சபையும் மாவனல்லை மாநகரசபையும் அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமுது ஆட்சிமன்றத்தில் சமர்ப்பித்தார்

ஆட்சிமன்ற தேர்தல் சட்டத்தைத் திருத்துவது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென தெரிவுக்குழுவொன்றை நியமிக்கும் பிரேரணையை சபை முதல்வர் பிரேரித்தார் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது

இதன்பின் வர்த்தகக் கப்பல் மசோதாவை கப்பல் உல்லாசத்துறை அமைச்சர் திரு பி பி ஜி களுகல்ல இரண்டாவது தடவையாகச் சமர்ப்பித்துப் பேசுகையில் இந்த மசோதா நிறைவேறியதும் இலங்கையிலேயே கப்பல்களைப் பதிவு செய்து கொள்ள முடியுமென்றும் அதன்பின் நமது தேசியக் கொடியுடன் நமது கப்பல்கள் ஏழுகடல்களிலும் பவனி வருமென்றும் கூறினார் இப்போதுள்ள இலங்கையின் ஒரேயொரு கப்பலான 'லங்கா ராணி' கூட பிரிட்டனில் பதிவுசெய்யப்பட்டு பிரிட்டிஷ் கொடியுடன்தான் செல்கிறதென்றும் குறிப்பிட்ட அமைச்சர் இவ்வருட இறுதிக்குள் அல்லது அடுத்த வருட முதலாகுதியில் வேறு நிதமாக இரண்டு கப்பல்கள் வரவு இலங்கை வாங்கி விடுமென்று நம்பிக்கை தெரிவித்தார்

இந்த மசோதாவை அடுத்த தொகுதி இரண்டாவது ஆட்சிமன்ற உறுப்பினர் ஜனாப் ஏ ஸி எஸ் ஹமீத், காலிப்பிரதிநிதி டாக்டர் டபிள்யு தகநாயக்கா, தெவிநுவரைப் பிரதிநிதி திரு ரெனி டி மெல் ஆகியோர் பாராட்டிப் பேசினர்

சபை ஒத்திவைப்புப் பிரேரணைமீது கொழும்பு மத்திய தொகுதி முதல்பிரதிநிதி திரு ஆர் பிரேமதாசா பேசுகையில் பத்திரிகைத் தணிக்கை யு என் பி காலத்திலிருந்ததைவிடக் கடுமையானதென்று சொன்னார்

## கால்வாயில் கள்ளு!

கொழும்பு, வியாழன் களுத்துறை மாவட்டத்திலுள்ள எட்டுச் சாராய வடிசாலைகளுக்குப் போய்ச் சேர்ந்திருக்கவேண்டிய ஆயிரக் கணக்கான கலன் கள்ளு காலவாய்களில் ஆறாகப் பெருகி ஓட நேர்ந்தது. இப்பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் கள்ளில் பெருமளவு தண்ணீர் கலந்து கொண்டதே இந்த நஷ்டத்துக்குக் காரணமாகும். (ச)

பீக்கிங்கில்

## இலங்கை வெற்றி

பீக்கிங், நவ. 3

பீகிங்கில் நடைபெற்று வரும் ஆபிரிக்க-ஆசிய டெபிள் டெனிஸ் போட்டியில் இலங்கைக் போஷ்டி முதலாவது போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை பெண்கள் போஷ்டி கினியா பெண்கள் போஷ்டியை 3—0 ஆட்டங்களாலும், ஆண்கள் போஷ்டி கமறூன் போஷ்டியை 5—0 ஆட்டங்களாலும் வெற்றி பெற்றன.

# தபால் புத்தக சேவை

## யாழ்ப்பாணம்

### பொது விஞ்ஞானப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்.

1. தி. சேரன் இளிநொச்சி, 2. செ. பரஞ்சிதன் வவுனியா, 3. சி. மனோகரன் திருக்கோணமலை, 4. வி. மாலச்சந்திரன் எட்டியாந்தோட்டை, 5. பா. கலாநந்தன்-குருந்தனாவை, 6. எம். சதிநாதன்-அநுராதபுரம், 7. தே. லக்சுமநாராயணன்-அந்தான், 8. எம். ஜ. சந்திரா-கல்முனை, 9. ஏ. ஜெகநாதன்-பண்டாரவளை, 10. சி. பழனிமலை- காரைநகர், 11. சித்தி லுதபியா-கொழும்பு, 12. எம். நாகராஜா-கோப்பாய், 13. இ. தனரஞ்சிதன்-காங்கேசன்துறை, 14. ஆ. வசந்தி-சாவகச்சேரி, 15. க. தவிராசலம்-அளவெட்டி, 16. செ. லலிதாவதி-கன்னாகம், 17. ஏ. இஸ்ஸத்தீன்-ஏருவூர், 18. எம். சி. அபூபக்கர்-பொத்துவில், 19. க. வேதநாதன்-பருத்தித்துறை, 20. ஆ. பஞ்சலிங்கம்-புங்குடுதீவு, 21. ஆர். யப்பாத்தி-பசறை, 22. எம். எக். எம். சாலீம்-சம்மாந்துறை, 23. இ. மகிந்தன்-ஊர்காவற்துறை, 24 எம். வி. நசீம்-மடவளை, 25. மு. செல்வகுமாரன்-முல்லைத்தீவு, 26. ஆர். பிரேம்குமார்-வத்தளை, 27. க. சோமசுந்தரம்-நெடுந்தீவு, 28. எம். எம். எம். சாதிக்-மூதூர், 29. வி. சுதாகுமார்-வந்தாறுமூலை, 30. ப. வசந்தா தேவி-அளவெட்டி, 31. செ. கிருஷ்ணவேணி-திருக்கோவில், 32. கு. ஆகிலன்-உடும்பராய், 33. சிறிசந்தா-மானிப்பாய், 34. பிரேம்குமார் சி.-கொழும்பு, 35. வா. மனோராவதி-கரவெட்டி, 36. சி. பொன்னம்மாவாத்தன், 37. ம. பவானி-கொழும்பு, 38 மு. ராஜேந்திரன்-நாவலப்பிட்டி, 39. ந. மகேந்திரவேல்-கொக்குவில், 40. பி. வேரியந்தா-மயிலிட்டி, 41. வா. தங்கசுணமூர்த்தி-கருவாஞ்சிக்குடி, 42. கி. வத்சலாதேவி-மானிப்பாய், 43. சி. வரதராசா-பண்டத்தரிப்பு, 44. லோ. பிரேம்ராஜ் கடுஞ்ஞ-மன்னார், 45. ஜெ. வசந்தினி-கண்டி, 46. ஆ. லோ. மாரிக்-யாழ்ப்பாணம், 47. என். ஜெஸீமா-மடுக்கோவில், 48. ஆர். பி. கோகிலதம்பா-டக்கோவா, 49. மு. கமலாம்பாள்-ஆடியபாதம், 50. எம். சற். எம். ஹிலால்-வெலிகாமம்.

பரிசு பெற்றவர்களுடன் தபாலகம் நேரடியாகத் தொடர்பு கொள்ளும்

## புதிய வெளியீடு:

8-ம் வகுப்பு உதவி நூல்கள் நவீன விஞ்ஞானப் பயிற்சி (11 வினாத்தாள்) 1|25, நவீன கணிதப்பயிற்சி (32 வினாத்தாள்) 2|00 N.P.T.A. அரசாங்க சோதனைக்கு மீட்க உகந்த உதவி நூல்கள்.

தபால் புத்தக சேவை
9/2 ஈச்சமோட்டை
யாழ்ப்பாணம்

A133

இளம்பெண் கடத்தல்

# சந்தேக நபர்களை பொலிஸ் தேடுகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட்டிற்கு வெளியே இளம்பெண் ஒருவர் கடத்தப்பட்டது சம்பந்தமாக பொலிஸார் மேலும் சில சந்தேகநபர்களை தேடிவருகின்றனர்.

இச்சம்பவம் சம்பந்தமாக பொலிஸார் சந்தேகத்தின் பேரில் முதலாவதாக கைதுசெய்த தோடு, டாக்ஸி ஒன்றையும் கைப்பற்றினர்.

சந்தேகநபர்களை யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் திரு கொல்லின் மெண்டிஸ் முன்னிலையில் பொலிஸார் ஆஜர் செய்தனர்.

மாஜிஸ்திரேட் சந்தேக நபர்களை இம்மாதம் 11ம் தேதிவரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார். கடத்தப்பட்டதாக கூறப்படும் 16வயது இளம் பெண்ணான யாலசரஸ்வதி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லையென பொலிஸ் வக்கீலரங்கிலிருந்து அறியப்படுகிறது.

## விரும்பியவர்களுடன் செல்ல மாஜிஸ்திரேட் உத்தரவு

யாழ்ப்பாணம், வெள்ளி

"விருப்பமானவர்களுடன் செல்லலாம்" எனக் கூறி இரகசியமாக ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த 16 வயதான இளம்பெண் யாலசரஸ்வதியை யாழ் மாஜிஸ்திரேட் கொல்லின் மெண்டிஸ் விடுதலைசெய்தார்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த இவ்விளம்பெண் பெற்றோர் பாதுகாப்பிலிருந்து காணாமல் போனதை தொடர்ந்து அன்றிரவு அப்பகுதியைச் சேர்ந்த வாலிபருடன் வாழ். கொழும்பில் சரண் புகுந்தார்.

கொழும்பு இருவரையும் யாழ் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்தபோது மாஜிஸ்திரேட் இருவரையும் ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். இரண்டாவது தடவை பொலிஸ் பெண்ணிற்கு பேரில் வந்த திருப்பதாக மாஜிஸ்திரேட்டிடம் கொண்டுவரப்பட்டதால் மாஜிஸ்திரேட் சந்தேகநபரான அப்பாலசேராவை விடுதலைசெய்தார்.

யாலசரஸ்வதி சந்தேகநபருடன் செல்லவேண்டியதாக கூறியதைத் தொடர்ந்து மீண்டும் ரிமாண்டில் வைக்கப்பட்டார். மூன்றாவது தவணையின்போது அப்பாலசேராவும் கோர்ட்டிற்கு வந்திருந்தார். விசாரணையைப் பார்ப்பதற்கு கோர்ட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர். மாஜிஸ்திரேட் இளம்பெண்ணை விடுதலைசெய்தார் பெண்ணின் பெற்றோரும் கோர்ட்டிற்கு வந்திருந்தனர்

ஆட்சிமன்றத்தில்

# வர்த்தக கப்பல்துறை மசோதா நிறைவேறியது

கொழும்பு, வியாழன்

வர்த்தகக் கப்பல்துறை மசோதா இன்று ஆட்சி மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. கப்பல் கூடுதுறையாகம் நிறுவப்பட்டபின்னர் 5 லட்சத்துக்கு அதிகமான பணம் கிடைத்துள்ளதாகப்பலதுறை அமைச்சர் திரு. பி பி ஜி களுகல்ல தெரிவித்தார்

இதே விவாதத்தில் கலந்து கொண்ட நிதி அமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா அமைச்சரைப்பாராட்டினார் 'லங்கா ராணி'யுடன் மேலும் 6 கப்பல் தேவைப்படுவதாகவும் டாக்டர் என் எம் சொன்னார், திரு. ரஞ்சன் தேசப்பிரியவும் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசினார்

நிதி அமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா முன்னதாக ஆறுவிகிதப் பட்டத்தை சபையில் சமர்ப்பித்தார். நாளை காலை 10 மணிக்கு மீண்டும் சபைகூடும்.

பூநகரியில்

## லொறியுடன் 40 அந்தர் வெங்காயம் சிக்கியது

பூநகரி, வியாழன்

40 அந்தர் வெங்காயத்தை கொண்டு சென்ற லொறி ஒன்றை நள்ளிரவில் பூநகரி வாரிவாதிகாரி திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தியும் கொண்டர் படையினர் மூவரும் சுற்றி வளைத்துப் பிடித்தனர்.

இந்த வெங்காயம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு கொண்டு செல்லப்படுவதாக கருதப்படுகிறது.

வெங்காயம் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து வாரிவாதிகாரியும், கொண்டர் படையினரும், நள்ளிரவு வரை குறிப்பிட்ட ஒரு இடத்தில் தங்கியிருந்து அப்பாதையால் வந்த லொறிக்கு முன்னால் சென்ற நடுத்த நிறுத்தினார்கள்.

கைப்பற்றப்பட்ட லொறியையும், வெங்காயத்தையும் வாரிவாதிகாரி அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்தார்.

கொண்டர்படையை சேர்ந்த திருவாளர்கள் பொ. விஜயமூர்த்தி, வி. செல்வராசா, பொ. நிக்கிநாதன் ஆகியோரின் சேவையை அரசாங்க அதிபர் பாராட்டினார்.

## 30 நெசவாசிரியர் வேலை இழந்தனர்

யாழ்ப்பாணம், வியாழன்

வடமகாணத்தில் 30 நெசவு நிலையங்கள், கிராமத் தொழில் ஆசிரியர்கள் சிங்களப்பரீட்சையில் தேர்ச்சிபெறாததின் காரணமாக வேலையிலிருந்து கடந்த வருடம் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

1968ம் ஆண்டுவரை சிங்களப்பரீட்சைக்கு தோற்றாதவர்களும் சிங்களப் பரீட்சையில் மூன்றும், ஐந்தாம் வகுப்புகளில் தேர்ச்சியடையாதவர்களும் கடந்தவருடம் வடமாகாணச் சிறுகுடிசைக் கைத்தொழில் இலாகாவினால் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். (கு வி ந)

## மணிவாக்கு

தன்னீர் இயற்கையாகப் பள்ளம் நோக்ிச் செல்வதுபோலவே தர்க்குணமும் மனிதனைக் கீழ்நோக்கி இழுத்துச் செல்கிறது. எனவே தர்க்குணத்தைப் போக்க இறைவழிபாடு மிக அவசியம்.

—சாந்திபடிக்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

வாரத்தொடக்கம் கிரேகரியரெழுதி வருஷம் ஐப்பசி மாதம் 19-ந் திகதி (5-11-71)


## பாகிஸ்தான்

பாகிஸ்தானுக்கும் சிறப்பாக அதன் அதிபரான யாஹ்யாகானுக்கும் இன்று ஏற்பட்டுள்ள சோதனை சாதாரணமானதன்று. தமது நாட்டில் ஜனநாயக ஆட்சி ஏற்படவேண்டுமென்ற ஆவலில் அவர் பொதுத்தேர்தலை நடாத்தினார். மக்கள் அளித்த தேர்தல் தீர்ப்பின்படி, தேசியசபையைக் கூட்டி அரசியல் திட்டமொன்றைத் தயாரித்து ஒப்புதலை, பாகிஸ்தானின் சமத்திரப் போக்கே வேறுபிரதமாக இருந்திருக்கும்.

ஆனால் துரதிருஷ்டவசமாக தவறான யோசனையை அவர் கேட்டதன் பயனாக, இரு வெட்டுண்ட பூதம் புறப்பட்டதுபோல் பெரிய அனர்த்தம் ஏற்பட்டுவிட்டது. கிழக்குப் பாகிஸ்தான் 15 லக்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவர் ஒரு கோடி பாகிஸ்தானியர் விடுவாக்கலை எல்லாம் விட்டுவிட்டு பாரதேசத்துக்கு வந்து தஞ்சம் புகுந்திருக்கிறார்கள் பாகிஸ்தான் விமானங்களை வானவெளியில் வைத்து அவர்கள் பதவியை உதறித் தள்ளிவிட்டு குடும்பங்களுடன் வெளியேறி இருக்கிறார்கள். இவையெல்லாம் நிச்சயம் பாகிஸ்தானின் பெருமையை உயர்த்தக்கூடியவை அல்ல.

இந்த அவல நிலையிலாவது மீளுவதெப்படி? கிழக்கு பாகிஸ்தான் பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஏற்படவேண்டுமென்று இந்தியா, இலங்கையுட்பட அநேகமாக எல்லாருமே யோசனை கூறுகிறார்கள். கடைசியாக அவுஸ்திரேலியாவும், பிரான்சும் இதே யோசனையை அதிபர் யாஹ்யாகானுக்குக் கூறியுள்ளன. இந்த யோசனையை அவர் ஏற்க மறுக்கலாம். இதற்குமாறாகத் தனக்குத் தெரிந்த முறையில் அரசியல் தீர்வுக்கான வழியைப் பின்பற்றவுமிலார். ஆனால் அவர் முயற்சி விரும்பத்தக்க பயனை அளிக்கமுடியுமா என்பதே கேள்வி.

முஜிபுர் ரஹ்மானை, அவர் இஷ்டப்படியிருந்தால் பல மாதங்களுக்கு முன்பே சுட்டுத்தள்ளி இருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. வழக்கு விசாரணையை இரகசியமாக நடாத்தி மரண தண்டனை அளிக்கச் செய்திருக்கலாம். மாதங்கள் ஏழாகியும், இவ்வித முடிவைச் செய்யாமல் அவர் தயங்குவதற்கு முக்கிய காரணம் இருக்கத்தான்வேண்டும். கி. பாகிஸ்தானில் மொத்தம் 70 ஸ்தானங்களுக்கு மறுதேர்தல் நடத்த உத்தரவிட்ட யாஹ்யாகான், முஜிபுரின் விடுதலைக்கிணங்கி, அவர் தெரிவு செய்யப்பட்டதன் கருத்தென்ன? ஆட்சிப் பொறுப்பை அவரிடம் ஒப்புவிக்கவேண்டுமென்பது தானே. மக்களின் அந்தத்தீர்ப்பு நாட்டுக்கு விருப்பமில்லையா? அவரை மக்கள் கொல்லவேண்டுமென்ற அஞ்சத்தேவையில்லை. தாம்செய்த பெரிய தவறையும் அதனால்ஏற்பட்ட அனர்த்தங்களையும் அதிபர் யாஹ்யா சற்றே யோசித்துப்பார்க்கவேண்டும். பாகிஸ்தானின் இன்றைய பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண அவரால் முடியுமா! அவருக்கு ஆட்சித் திறன் இல்லை என்பதை சென்ற சில மாத சம்பவங்கள் தெளிவாகக் காட்டிவிட்டன. பாகிஸ்தானின் இன்றைய பிரச்னைக்கு நடைமுறையான அரசியல் தீர்வுகாணவேண்டிய முதலில் அவர் உண்மையாக ஒப்புவிக்கிறது. தனக்குப் பதில், சென்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட சிலரை நியமித்து, அவர்களிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்புவித்து விடுவதே பாகிஸ்தானின் இன்றைய பெரிய பிரச்னைதீர சரியான ஜனநாயக வழியாகும்.

## இன்னையில்

### கலைஞர்

சென்னை, நவம்பர் 4

சென்னையில் சில இடங்களில் காலரா நோய் பரவியிருக்கின்றது. இதுவரை இருவர் இந்த நோயினால் மரணமாகியுள்ளதாகவும் 440 பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

# பருப்புவகை தட்டுப்பாடு

உருத்தம் பருப்பு, கடலைப்பருப்பு, துவரம்பருப்பு, பயத்தம்பருப்பு இவை எதுவுமே கிடைக்கவில்லை என்றும் சமையல் சமாசாரங்களுக்கெல்லாம் அதிக தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் ஒரு தாய் புலவர் தெரிவித்தார். எல்லாத்தாய்மார்களுக்கும் இதே கஷ்டம் தானே!

இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஒரு தாயிடம் தான் ஒப்புவித்திருக்கிறோம். பருப்பு வகைகள், மற்ற சாமான்கள் இல்லாத சமாச்சாரம் பிரதமருக்குத் தெரியுமோ தெரியாதோ! மற்றத் தாய்மார்கள் அவரிடம் ஒரு தூதுகோஷ்டியை அனுப்பி தங்கள் சங்கடங்களைச் சொன்னால் என்ன? தாய்மார்களின் கஷ்டத்தை ஒரு தாயான பிரதமர் நன்கு உணர்ந்தால் அதை அனுதாபத்துடன் தீர்க்க முடியுமல்லவா? அவர் தீர்க்காவிட்டால் வேறு யாராலாவதுதீர்க்க முடியும்?

இனி தோசை, இட்டலி, வடை எல்லாம் மறந்துவிடவேண்டியதுதானா? எவ்வளவோ ஏழைத்தாய்மார்கள் வடை, தோசை விற்று ஜீவிக்கிறார்கள்! ரயிலிலே ஸ்டேஷன்களில் 'வடே வடே' என்று கதறும் குரல்களை இனிக் கேட்க முடியுமா?

இவையெல்லாம் தாய்மாருக்குக் கிடைக்காத நிலையிலும், ஓட்டல்களில் எப்படி இவற்றையெல்லாம் செய்து விற்கிறார்கள்? இதைப்பற்றி ஒரு ஒட்டல் காரரை விசாரித்தேன். ஏதோ முன்னர் சேர்த்து வைத்திருந்த சாமான்கள் உதவியிருக்கலாகவும் இனி என்ன செய்வதென்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம் என்றார்.

கோதுமை மாவு இனி வடை தயாரிப்பதற்கு பயன்படாதுபோகும்!

பருப்பு இல்லாமல் வாழ முடியாதா? நாட்டிலே சோளவிப்பஞ்சம் ஏற்படக்கூடுமென்பதால் சோளமாவையும் எவிறவும் கடை வேண்டாமா? தேசாபிமானத்துடன் தியாகம் செய்யமுன்வர வேண்டாமா? நம் நாட்டிலேயே இந்தப் பருப்புவகைகளை ஏன் உற்பத்தி செய்யக்கூடாது? என்று சிலர் நம்மைத் திருப்பிக் கேட்கலாம்.

எதைப் போட்டாலும் பொன்னாய் விளைய பூமாதேவி இன்று காத்திருக்கிறாள். மக்களாரர்கள் இனி பருப்பு வகைகளை இங்கு உற்பத்தி செய்வதிலும் அவர்களுக்கு அரசாங்கம் கடிய உதவிகள் அளிப்பதிலும் ஊக்கம் காட்டினால் பருப்புப் பஞ்சம் சீக்கிரத்தில் தீரக்கூடும்தான். கமக்காரருக்கும் நல்ல லாபம் கிடைக்கும். நாட்டுக்குச் சோளவிப்பும் மிச்சப்படும்.

## ஐயாறன் எழுதுவது

இந்த உணவுப் பொருள்களை நினைவி ஏழைகளும் நடுத்தர குடும்பத்தாரும் வாங்கிக்கிறார்கள். பணக்காரரின் உபயோகப் பொருளல்ல இவை. இவற்றின் இறக்குமதியைத் திடீரென நிறுத்தினால் பொதுமக்களுக்கு மிகச் சங்கடம் ஏற்படும். படிப்படியாக இந்த இறக்குமதியைக் குறைக்கப் படாதா?

தாய்மார்கள் கஷ்டமா இராமல் தங்கள் சங்கடங்களை நல்லபடி பிரதமரிடம் எடுத்துச் சொன்னால் இதற்குப் பயன் இருக்கவே செய்யும். அழுகிற பிள்ளைக்குத்தானே பால் கிடைக்கும்?

கதிர்காமத்துக்கு பிரதமர் சென்று அன்னதானம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். "இறைவனை வழிபடுவதும், பிரித்து ஓதுவதும் இந்நாட்டுக்கும் மக்களுக்கும் நல்ல பலனைத் தரும்" என்று அவர் நம்பிக்கையுடன் கூறியிருக்கிறார்.

ஏழை எளிய மக்களிடம் கடவுளுக்கல்லாது, ஊருக்கு ஊர் அன்னதானங்களை வழங்கி, பட்டினியோடு ஒழித்தால் மக்கள் மனம் குளிரவும், சுபிக்ஷம் வளரவும் செய்யுமல்லவோ!

0 0

பிரதமர் ஸ்ரீமாவை ஒரு பத்தரென்றும், திருவருளால் அவர் பெரிய ஆபத்துக்குத்தப்பி வாக்க பக்டார் என்றும் கறப்பட்ட ஒருவருக்கு வாசுதேவர் ஒருவருக்குப் பிடிக்காமல் ஒரு வடிதம் எழுதியுள்ளார்.

'அப்பர்சுவாமிகள், மாற்றமாவாத்தி போன்றவர்கள்' தான் பக்தர்கள் என்றும் கறுகின்றார்.

"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னாகி நாயகராகி மேலைத் தொல்லைநி ஆடுவர், என்னாம்' என்று சுந்தரராணம் உறுதி கூறுகின்றது.

"முருகா" என்று ஒரு முறை கூறவும் அவர் திருமுன் நிற்கவுமே திருவருள் வேண்டும். அவன் அருள் இருப்பதால்தானே அவன் தாள் வணங்கமுடியும்? எவ்வளவு தீயவராயினும் அவர் திருமுன்போய் நின்றால், அவர் அருளால் தூயவராகி விடமுடியாதா? செய்த பாவம் கிங்கொல்லாக் கறக்கப்பட்டு விடாதா? கடவுளால் முடியாததும் உண்டோ?

0 0

முனரென இருவரென
முக்கண் உடைய
மூர்த்தி
மாகிக்கனி தூ கிரும்
மொழிக மாதோட்ட
நன்னகரில்
பாவம்கிங்கு அறப்பார்
பயில் பாலாவியில்
கரைமேல்
தேவர்என ஆள்வாள்
திருக்கேதீச்சரத்தாரே

—சுந்தரமூர்த்திசுவாமிகள்

நிக்ஸனின் வெளிஉதவித்திட்டம்

# சினட் மறுபரிசீலனை முயற்சியும் தோல்வி

நியுயோர்க், நவ 4

அமெரிக்க அதிபர் நிக்ஸனின் வெளிநாட்டு உதவிகள் திட்டம்பற்றி மறுபரிசீலனை செய்யும்படி செனட் சபையை வற்புறுத்த அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ரோஜர்ஸினால் கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

அதிபர் நிக்ஸனின் வெளிநாட்டு உதவிகள் திட்டம் செனட்சபையினால் ஏற்கெனவே நிராகரிக்கப்பட்டுவிட்டது. இதன் காரணமாக அமெரிக்க உதவி பெறும் பல வெளிநாடுகள் பாதிக்கப்படவிருக்கின்றன.

இந்தத் திட்டம்பற்றிய முடிவை மறுபரிசீலனை செய்யும்படி செனட்சபையை வற்புறுத்துமாறு செனட்டின் வெளிஉறவுக் கமிட்டியை நேற்று திரு. ரோஜர்ஸ் கேட்டுக் கொண்டார்.

ஆனால் இதற்கு செனட்டின் வெளிஉறவுக் கமிட்டி மறுத்துவிட்டதாகத் தெரிகின்றது. ஆனால் இடைக்கால வெளிநாட்டுதவித்திட்டம் ஒன்று கொண்டுவரப்படலாம் என்று அதன் ஆதரிப்பாளர் வெளிஉறவுக் கமிட்டி உறுப்பினர்கள் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

இதேசமயம் அதிபர் நிக்ஸனின் இந்த வெளிஉறவுத் திட்டம் அமெரிக்க காங்கிரஸ் சபையில் நிறைவேறும் என்று நிக்ஸன் நிர்வாகம் எதிர்பார்ப்பதாகத் தெரிகின்றது. இந்தக் கருத்தை அமெரிக்க வாக்குவாப்பு அமைச்சர் திரு. லேயார்டும் வெளியிட்டுள்ளார்.

## அவசியம்

கோண்டை, வியாழன் உயர்தரக் கல்விப் பிரச்னையையும், கேகொலாப்பையையும் ஆராய அரசாங்கம் தமிழுக்கு ஒன்றை நியமிக்க வேண்டுமெனக் கல்வியமைச்சருக்கு மானவர் பிரச்னை பற்றி ஆராய நிறுவப்பட்ட குழு சிபார்சு செய்துள்ளது உயர் கல்விமுறை முற்றாகப் புனராலோசனை செய்யப்படவேண்டுமென்றும் குழு தெரிவித்துள்ளது.

## கல்வி

(1ம் பக்கத்தொடர்ச்சி)

முன்னதாக தெரிவித்த போதே கல்வி சீரமைப்புத் திட்டம்பற்றி ஆட்சேபனைத் திட்டம் விவாதிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்குமென உதவிக்கல்விமந்திரி அறிவித்தார்.

## அவநம்பிக்கை பிரேரணை

யாழ்ப்பாணம், வெல்வெட்டுத்துறைக் கிராம சபையைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவிருக்கிறது. இதற்கான விசேட கூட்டத்தை இம்மாதம் 6-ம் தேதி காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. சே. நல்லரத்தினம் கூட்டுகிறார்.

வல்வெட்டித்துறை கிராம சபை உறுப்பினர்களில் 6 பேர் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்ற பிரேரணையைக் கொண்டுவருவதற்காக ஒரு விசேட கூட்டத்தை கூட்ட வேண்டுமென்று உதவி அரசாங்க அதிபர் உதவி ஆணையாளரை எழுத்துமூலம் கேட்டுக்கொண்டனர்.

—

யாழ்ப்பாணம், வெல்வெட்டித்துறைப் பகுதியிலிருந்து கடலேரி நன்னீர்த்திட்டம் அடுத்த ஆண்டில் பயனளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கண்டிக்குளப் பக்கத்து ஆணைக்கட்டு இப்போது மண் இடுப்பிடுந்த கட்டு விதிரமாகியுள்ளதென்றும் நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் க்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெல் லேனில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.